செ.வெ.எண் : 810/2024 நாள் : 15.11.2024

**செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலை பள்ளியில் கணினி பயிற்றுநர் பணிக்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டியில் செயல்பட்டு வரும் செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலை பள்ளியில் கணினி பயிற்றுநர் பணிக்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலை பள்ளியில் கணினி பயிற்றுநர் பணியிடத்திற்கு தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிய தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. 01.07.2024ல் 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு ஏதுமில்லை. B.Ed.. கல்வித்தகுதியுடன் பி.இ., கணிணி அறிவியல் அல்லது பி.எஸ்.சி., கணிணி அறிவியல் அல்லது பி.சி.ஏ., அல்லது பி.எஸ்.சி., தகவல் தொழில்நுட்பம் ஆகிய பட்டப்படிப்புகளில் ஏதாவது ஒரு பட்டப் படிப்பு முடித்தவராக இருக்க வேண்டும். மாத தொகுப்பூதியம் ரூ.15,000/– வழங்கப்படும்.

மேற்காணும் தகுதியுடையவர்கள் தலைமையாசிரியர், செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி, கொண்டப்பநாயக்கன்பட்டி, சேலம் – 636 008 என்ற முகவரியில் 20.11.2024 மாலை 5.00 மணிக்குள் அனைத்து கல்வித்தகுதி சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், விவரங்களுக்கு 94999 33469, 0427 2442067 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.

IPROSalem PRO Salem pro.slm PRO Salem